


**07.02.2025**

**தலைப்பு செய்திகள்**

1. மத்திய அமைச்சரவை கூட்டம் பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

2. 2025-26-ஆம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியுள்ளது.

3. ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 6.25 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது.

4. நெல்லை மாவட்டம் மூலக்கரைபட்டி மற்றும் நாங்குநேரியில் புதிய சிப்காட் தொழிற் பூங்கா அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

5. சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டங்களில் இந்திய இணைகள் இன்று களமிறங்குகின்றன.

**இனி விரிவான செய்திகள்**

**அமைச்சரவை கூட்டம்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

புதிய வருமான வரி மசோதா அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட உள்ள நிலையில் இதுதொடர்பாக இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படலாம் என தெரிகிறது.

***********

**மக்களவை – நிதிநிலை அறிக்கை விவாதம்**

2025-26-ஆம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் மக்களவையில் இன்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த விவாதத்தை துவக்கிவைத்து பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. தரம்வீர் காந்தி, மீன்வளத்துறை சவால்களுக்கு பட்ஜெட்டில் தீர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்று குறை கூறினார்.

தரமான கல்வி பயில கூடுதல் செலவு ஏற்படுவதாகவும்,

இதனால் ஏழை எளிய மக்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும் தரமான கல்வி கிடைப்பதில்லை என்றும் குறிப்பிட்டார்.

பிஜேபி உறுப்பினர் திரு.ராவ் ராஜேந்திரசிங் பேசுகையில் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்கள் விவசாயிகள், மகளிரின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கியிருப்பதாக பாராட்டு தெரிவித்தார்.

விவசாயிகளின் நலன்களுக்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை வழங்கியிருப்பதாகவும், இவ்வரிசையில் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மக்களவையில் தொடர்ந்து விவாதம் நடைபெற்று வருகிறது.

***********

**மக்களவை - ஜே.பி.நட்டா**

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அடிப்படை சுகாதார வசதிகளை மேம்படுத்த அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக மத்திய சுகாதாரம் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் ஆதரவுடன் அனைத்து குடிமக்களும் குறிப்பாக பழங்குடியின மக்களுக்கு தரமான மருத்துவ வசதிகள் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்றார்.

முன்னதாக துணை கேள்விகளுக்கு பதில் அளித்த இத்துறைக்கான இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் உலக அளவில் கடந்த 30 ஆண்டுகளில் மகப்பேறு இறப்பு விகிதம் 42 சதவிகிதமாக குறைந்துள்ளதாகவும்,

இதில் இந்தியாவில் மட்டும் 83 சதவிகிதம் மகப்பேறு மரணங்கள் குறைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

***********

**மாநிலங்களவை - சிவ்ராஜ் சிங் சவ்ஹான்**

நாட்டில் சென்ற ஆண்டின் இறுதிவரை 4 ஆயிரத்து 300 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் அரசின் மின்னணு இணையதளத்தில் பதிவு செய்திருப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று இதனை தெரிவித்த அமைச்சர், இதன்மூலம் 4 கோடியே 80 லட்சம் விவசாயிகள் 249 கோடி ரூபாய் பயன்களை பெற்றிருப்பதாக எடுத்துரைத்தார்.

இதுவரை 10 ஆயிரம் பண்ணை உற்பத்தியாளர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் கூறினார்.

மேலும் ஆயிரத்து 400 வேளாண் சந்தைகளும் இணையதளங்களில் பதிவு செய்திருப்பதாகவும்,

வேளாண் பயன்களை பெற விவசாயிகள் இதில் பதிவுசெய்துகொள்ளுமாறும் அமைச்சர் கூறினார்.

22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஈ-நாம் செயலியில் இணைந்ததன் மூலம் சர்வதேச வர்த்தக வாய்ப்புகளை பெற்றிருப்பதாகவும் இதனால் ஆறாயிரம் கோடி ரூபாய் பண பயன்களை வணிகம்மூலம் ஈட்டியுள்ளாகவும் அமைச்சர் கூறினார்.

***********

**மாநிலங்களவையில் பியூஷ் கோயல்**

நம் நாட்டின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டின் இறுதியில் 800 பில்லியன் டாலரை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இது முன் எப்போதும் இல்லாத அளவிற்கு மிக அதிகமானது இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

நம் நாட்டின் சர்வதேச வர்த்தகம் விரிவடைந்திருப்பதோடு சேவை மற்றும் வணிக பிரிவுகளின் ஏற்றுமதிகள் வலுவாக இருப்பதே இந்த உயர்வுக்கு காரணம் என்றும் அமைச்சர் கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் வைர தொழிற்சாலைகள் தரத்தை பராமரிக்கும் வகையிலான நெறிமுறைகளை மேற்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கடந்த 4 ஆண்டுகளில் வைர ஏற்றுமதி பல்வேறு காரணங்களால் குறைந்திருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆய்வகம் சார்ந்த வைரங்களின் தேவை இந்தியாவில் அதிகரித்து வருவதாக கூறிய அவர் வைரத்தின் தரத்தையும், அதுதொடர்பனா சான்றுகளையும் பராமரிக்க அரசு அனைத்து நடவடிக்கைககளையும் மேற்கொண்டுவருவதாக கூறினார்.

இருப்பினும் நகை ஏற்றுமதி குறையவில்லை என்றும் திரு.பியூஷ்கோயல் குறிப்பிட்டார்.

***********

**ஆர்பாட்டம்**

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை கண்டித்து காங்கிரஸ், திமுக, ராஷ்டிரிய ஜனதாதள், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி, இலங்கை கடற்படையினர் 97 மீனவர்களை கைது செய்து சிறை

வைத்திருப்பதாகவும், அவர்களை திரும்ப தாயகம் கொண்டுவரவேண்டும் என்றும் கோரினார்.

மக்களவையிலும் கேள்வி நேரத்திற்கு பின்னர் இப்பிரச்சனையை அவர் எழுப்பினார்.

***********

**ரிசர்வ் வங்கி**

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் 5 ஆண்டுகளுக்கு பின்னர் 25 அடிப்படை புள்ளிகள் குறைத்து ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சஞ்சீவ் மல்ஹோத்ரா இன்று அறிவிப்பு வெளியிட்டார்.

மும்பையில் வங்கியின் இருமாத நிதிக்கொள்கையை இன்று வெளியிட்டு பேசிய அவர் இதன்படி ரெப்போ வட்டி விகிதம் 6.5 சதவிகிதத்திலிருந்து 6.25 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் பொருளாதார தேவைகளுக்கான நிதி ஸ்திரதன்மையை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை வங்கி மேற்கொள்ளும் என்றார்.

பணவீக்க விகிதம் குறைந்திருப்பதாகவும், இதுமேலும் குறையும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சி விகிதம் அடுத்த நிதியாண்டில் 6.7 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக திரு.சஞ்சீவ் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

***********

**பிரயாக்ராஜ்**

உத்திபிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் மத்திய கலாச்சார அமைச்சகத்தின் சார்பில் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் இன்றுமாலை நடைபெறுகின்றன.

நாடு முழுவதிலுமிருந்து இசை, நடனம் மற்றும் கலை வல்லுநர்கள் இதில் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர்.

பிரபல பின்னனி பாடகர்கள் ஹரிகரன், கவிதா கிருஷ்ண மூர்த்தி ஆகியோரின் இசை நிகழ்ச்சிகளோடு ஒடிசி நடன கலைஞர் சோனல் மான்சிங்கின் நடனமும் இடம்பெறுகிறது.

***********

**டெல்லி தேர்தல்**

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்க உள்ள நிலையில் முடிவுகள் நண்பகல் வாக்கில் தெரியவரும்.

தபால் வாக்குகள் முதலில் எண்ணப்படும்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் கண்காணிப்பு தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

உத்திரபிரதேசம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையும் நாளை நடைபெறுகிறது.

***********

**முதலமைச்சர்**

தாமிரபரணி ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரத்து 679 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்ட பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற பணிகளை தொடங்கிவைத்தும் பேசிய அவர், மாவட்டத்தில் புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் விரைவில் அமைக்கப்படும் என்றார்.

மணிமுத்தாறு பகுதியில் சாகச சுற்றுலா குறித்து அரசு பரிசீலித்து வருவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

பாளையங்கோட்டையில் 120 கோடி ரூபாய் மதிப்பில் புதிய மேம்பாலம்,

மேலபாளையத்தில் 9 கோடிரூபாய் செலவில் 4 வழிசாலை,

பாபநாசம் பகுதியில் 5 கோடி ரூபாய் செலவில் உள்கட்டமைப்பு மேம்பாடு,

மூலக்கரைபட்டி மற்றும் நாங்குநேரியில் புதிய சிப்காட் பூங்கா உள்ளிட்ட புதிய அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

***********

**செய்முறை தேர்வு**

12ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதும் மாணாக்கருக்கான செய்முறை தேர்வுகள் தமிழகம் முழுவதும் இன்று தொடங்கின.

சென்னை சைதாப்பேட்டை அரசு மாதிரி மற்றும் தகைசால் பள்ளி தேர்வு கூடத்தை மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று பார்வையிட்டார்.

***********

**எடப்பாடி**

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மாநிலத்தில் நாளுக்கு நாள் பெண்களுக்கு எதிரான குற்ற செயல்கள் அதிகரித்து வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

***********

**குளிர்கால விளையாட்டு**

சீனாவின் ஹார்பின் நகரில் 9ஆவது ஆசிய குளிர்கால விளையாட்டு போட்டிகள் இன்றுமாலை தொடங்குகின்றன.

வரும் 14ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டிகளில் இந்தியாவிலிருந்து 59 தடகள வீரர்கள் உட்பட 88 பேர் கொண்ட குழு பங்கேற்க உள்ளது.

***********

**திருச்சி**

திருச்சி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மாணாக்கருக்கான பிரதமரின் இளம் சாதனையாளர் உதவிதொகை பெற தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

***********

**வீடுதேடி மருத்துவம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மத்திய அரசின் நடமாடும் மருத்துவ வாகனம் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

***********

**இருவரி**

**நாகை மாவட்டம் ஒரத்தூர் அரசு மருத்துவ** கல்லூரி மருத்துவமனையில் வரும் 11ஆம் தேதி நடைபெற இருந்த மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாம் வரும் 18ஆம் தேதி நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

**பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக** வளாகத்தில் தொழிலாளர் நலத்துறை சார்பில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதனிடையே பெரம்பலூர் கிளை சிறையில் அடிப்படை வசதிகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ் தலைமையிலான குழுவினர் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

***********

**உதகை பனிபொழிவு**

நீலகிரி மாவட்டத்தில் உதகை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 20 நாட்களுக்கு பின்னர் மீண்டும் கடும் பனிப்பொழிவு காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**டென்னிஸ்**

சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சாகேத் மைனேனி இணை – தைவான் ஆஸ்திரேலிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

மற்றொரு அரையிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் விஜய்சுந்தர் பிரசாந்த் இணை – ஜப்பான் இணையுடன் மோதுகிறது.

***********

**கிரிக்கெட்**

இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 2ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி நாளை மறுநாள் கட்டக்கில் நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

***********